

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலையொட்டி கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து கிணார் ஊராட்சி, கே.கே.புதூர் கிராமத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வீடு வீடாகச் சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அருகில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பகுதிச் செயலாளர்கள் ஏ.கே.கருணாகரன், மாடம்பாக்கம் ஆ.நடராஜன், கிணார் ஊராட்சி மன்ற தலைவர் ஜெ.அரசு மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

மதுராந்தகம் இடைத்தேர்தலில் போட்டியிடும்

கழக வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து வீடு வீடாக பிரச்சாரம்!

முன்னாள் அமைச்சர்கள் செஞ்சி ராமச்சந்திரன், செஞ்சி மஸ்தான் வாக்கு சேகரித்தனர்!



அச்சிறுப்பாக்கம்,செப் 30-

மதுராந்தகம் சட்ட மன்ற தொகுதி இடைத் தேர்தலில் திமுக கழகத் தின் சார்பில் கழகத்தின் வெற்றி வேட்பாளர் வழக் கறிஞர் பரந்தாமன் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார்.

இவரை ஆதரித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக நிர்வாகி கள் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலை மையில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அகிலி, மாத் தூர், ஊனமலை, சிறு நாக லூர் ஆகிய ஊராட்சிகளில் உதயசூரியன் சின்னத்தி ற்கு தீவிர வாக்கு சேகரித்து வருகின்றனர்.

அப்போது அகிலி ஊராட்சியில்முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன்

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர், செஞ்சி மஸ்தான் ஆகி யோர் தலைமையில்,அச்சி றுப்பாக்கம் வடக்கு ஒன் றிய செயலாளர் தம்பு, ஒன்றிய கவுன்சிலர் சிலம் பரசன் ஆகியோர் முன்னி லையில்

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், உள் ளிட்ட திமுகவினர்

அகிலிஊராட்சியில் உள்ளஆதி திராவிடர் பகு தியில் உள்ள ஒவ்வொரு வீடாக சென்று திமுக ஆட்சியில் செய்த பல் வேறு திட்டங்களை வாக் காளர்களிடத்தில் கூறி இத் திட்டங்களை மீண்டும் செயல்படுத்தற்கு

உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு கேட்டுதிமுக வேட்பாளர் பரந்தாமனை அதிக வாக் குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என வலியு றுத்தி துண்டு பிரசுரத்தை வழங்கினர்.

இதில்அகிலிஊராட்சி நிர்வாகிகள் விஜயன், மார்ட்டின், விக்டர், வரத ராஜன்,செஞ்சி ஒன்றிய அவை தலைவர் வாசு, மாவட்ட பிரதிநிதி அய்யா துரை, ஒன்றிய இளைஞ ரணி அமைப்பாளர் ஜம் பேதி பழனி, மேல்மலையனூர் ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் இயல்பைவிட வெயில் தாக்கம் அதிகரிப்பு!

மலேரியா பரவலுக்கு வாய்ப்பு! வானிலை மையம் எச்சரிக்கை!

சென்னை, செப். 30-

தமிழகத்தில் தொடரும் வெயில் இயல்பை விட 2-5 டிகிரி அதிகரிப்பதால் மலேரியா பரவலுக்கு வாய்ப்பு அதிகம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வெயிலின் தாக்கம் தொடர்ந்து அதிக மாக காணப்படுகிறது. திங் கட்கிழமை பல இடங்க ளில் இயல்பை விட 2 முதல் 5 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை அதிக மாக பதிவான 40 நிலை யில், அடுத்த சில நாட்க ளில் பல மாவட்டங்களில் இடியுடன் கூடிய கன மழை பெய்ய வாய்ப்புள் ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளி யிட்ட தகவலின்படி, திங் கட்கிழமை அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றம் ஏதும் இல்லை. இருப்பினும், பல பகுதிக ளில் இயல்பை விட வெப் பநிலை கணிசமாக அதிக மாக இருந்தது. அதிகபட்சமாக மதுரை விமான நிலையத்தில் 39.5 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை பதிவானது. பாளை யங்கோட்டையில் 38.6, கரூர் பரமத்தியில் 38.2, ஈரோடு மற்றும் தஞ்சாவூ ரில் தலா 38, சென்னை விமான நிலையத்தில் 37.5 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை பதிவானது. செப்.30ம் தேதி வரை தமி ழகத்தின் சில பகுதிகளில் இயல்பை விட 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகமாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

இதற்கிடையே, வெப்ப நிலை தொடர்பான உடல் நல பாதிப்புகள் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையத்தின் சுகாதார அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை 33 முதல் 39 டிகிரி செல்சியஸ் வரையி லும், குறைந்தபட்ச வெப்ப நிலை 16 முதல் 19 டிகிரி செல்சியஸ் வரையி லும் இருக்கும் சூழல் மலே ரியா பரவுவதற்கு சாதக மானதாக இருக்கலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 1-ம் தேதி வரையிலான காலகட் டத் தில், கணிக்கப்பட்ட வெப் பநிலை அடிப்படையில் தமிழகத்தின் முக்கிய மாவட்டங்கள், மலேரியா பரவும் வாய்ப்பு 75 சதவீ தம் உள்ள பிரிவில் இடம் பெற்றுள்ளன. இதே போல், அக்டோபர் 2 முதல் 8-ம் தேதி வரையி லும் தமிழகத்திற்கு 75 சத வீத வாய்ப்பு உள்ளதாக சுகாதார அறிக்கை குறிப்பி டுகிறது.

இந்நிலையில், அடுத்த சில நாட்களில் பெய்யும் மழையால் சில பகுதிக ளில் வெப்பத்தின் தாக்கம் குறைய வாய்ப்புள்ளது. நேற்று ஈரோடு, நாமக்கல், மதுரை மாவட் டங்களில் ஒரு இடங்களில் கன மழை பெய்யக் கூடும். நாளை நீலகிரி, ஈரோடு, சேலம்,தர்மபுரி, கிருஷ்ண கிரி ஒரு மாவட்டங்க ளில் இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள் ளது. அக் டோபர் 1-ம் தேதி நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் ஒரு இடங்களில் கன மழை பெய்யக்கூடும்.

தென்மேற்கு பருவ மழை படிப்படியாக வில கத் தொடங்கியுள்ள நிலை யில், தமிழகத்தில் வழக்கமான காலமான அக்டோபர் 15-ம் தேதி யையொட்டி வடகிழக்கு பருவமழை தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச. சங்கர் கணேஸ் எம்.சி. இல்ல நிகழ்ச்சியில் பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் கணபதி,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பிரபாகர் ராஜா, சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட,பகுதி, வட்டக்,கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்தினர்.



மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் பணிக்காக சென்னை தெற்கு மாவட்டம் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மெய்யூர் ஊராட்சி பாகம் 22இல் சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வீடு வீடாக சென்று நேற்று (29-9-2026) வாக்காளர்களை சந்தித்து உதயசூரியனுக்கு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் துரை.வீரமணி, கமலக்கண்ணன், ரமேஷ், நாராயணன், பொற்செல்வி, ஜான்சி, ஆர்.வினோத், எஸ்.பி.அருள், நவீன்குமார், ஜசக்நேசக்குமார், செல்வம், சசிக்குமார், சகிலா மற்றும் பூபதியம்மாள் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் உடனிருந்தனர்.

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாருக்கு எதிரான வழக்குகளை

அவசரமாக விசாரிக்க உச்சநீதிமன்றம் ஒப்புதல்!

புதுடெல்லி, செப். 30-

தலைமை தேர்தல் ஆணை யர் ஞானேஷ்குமார் தன்னிச்சையாக செயல்பட்டதாக தொடரப்பட்ட வழக்கு களை அவசரமாக விசாரிக்க உச்சநீ திமன்றம் சம்மதம் தெரிவித்துள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தில் உள்ள மற்ற 2 தேர்தல் ஆணையர்க ளிடம் எந்தவித ஆலோசனையும் ஒப் புதலும் பெறாமல். தலைமை தேர் தல் ஆணையர் ஞானேஷ்குமார் தன் னிச்சையாக முக்கிய முடிவுகளை எடுத்ததாக தொடர் குற் றச்சாட்டுகள் எழுந்தன. அரசியல் சாசன அமைப்பான தேர்தல் ஆணையத்தை ஒரு தனிநபர் தனது விருப்பம்போல் வழிநடத்துவது முறையற்றது என பல்வேறு அரசி யல் கட்சிகள் கடும் கண்டனம் தெரி வித்து வந்தன.

மேலும், இந்த விவகாரத்தை கண்டித்து கரப்பான்பூச்சி அமைப் பின் சார்பில் நாடு தழுவிய போராட் டங்களும் அறிவித்துள்ளது. கூழலில், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் எனவும், அவரை உடனடியாக பத வியிலிருந்து நீக்க வேண்டும் என வும் உச்சநீதிமன்றத்தில் பல்வேறு புதிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட் டன.

இந்த மனுக்கள் தலைமை நீதி பதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஜாய் மால்யா பாக்சி மற்றும் வி.மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் மூத்த வழக்கறிஞர் விகாஷ் சிங் மூலம் அவசர முறையீடாக கொண்டு வரப்பட்டது.

அப்போது வாதாடிய அவர், 'தேர் தல் ஆணையத்தில் உள்ள மற்ற 2 ஆணையர்களின் ஒப்புதல் இல்லா மல் தலைமை தேர் தல் ஆணையர் ஞானேஷ்குமார் தன்னிச்சையாக முடி வெடுக்க அதிகாரம் உள் ளதா என்ற நியாயமான சந்தேகம் எழுகி றது; ஆணையத் தின் முடிவுகள் அனைத்தும் ஒருமனதாகவோ அல் லது பெரும்பான்மை அடிப்ப டையி லோதான் இருக்க வேண்டும் என்ற சட்டப் பூர்வ விதிமுறைகளை மீறி எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கை களையும் ரத்து செய்ய வேண்டும்' என்று வாதிட்டார்.

தேர்தல் ஆணையத்தின் செயல் பாடுகளில் தனிநபர் ஆதிக்கம் இருப் பதாக எழுந்திருக்கும் சுடுமையான சந்தேகங்களை தெளிவுபடுத்தும் வகையில் இந்த மனுக்களை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என் றும் வழக்கறிஞர் வலியுறுத்தினார். மூத்த வழக்கறிஞர் முன்வைத்த அழுத்தமான வாதங்களை ஏற்றுக் கொண்ட தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, ஜனநாயக நடைமுறைகளை பாதுகாக்கும் நோக்கில் மனுக்களை பரிசீலிப்பதாக உறுதி அளித்தது.

அதனைத் தொடர்ந்து, தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமா ருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட் டுள்ள அனைத்து வழக்குகளையும் வரும் வாரம் முறைப்படி பட்டியலிட்டு முழுமையாக விசாரிப்பதாக உச்சநீதி மன்ற நீதிபதிகள் அதிரடி உத்தரவு பிறப்பித்தனர்.

அச்சிறுப்பாக்கம் தெற்கு – வடக்கு ஒன்றியங்களில் (இன்று)

கழக வேட்பாளர் இ.பரந்தாமன் வாக்கு சேகரிக்கிறார்!

தொகுதிப் பொறுப்பாளர்கள் தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் அறிவிப்பு!





06.10.2026 அன்று நடைபெற உள்ள சட்டமன்ற இடைத்தேர்தலில் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசியுடன் மதச்சார்பற்ற முற்போக்கு கட்சிகளின் சார்பில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் - வழக்கறிஞர் இ.பரந்தாமன் அச்சிறுப்பாக்கம் தெற்கு - வடக்கு ஒன்றியத்தில் இன்று (30.9.2026 - புதன்கிழமை) உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்க ஊராட்சி வாரியாக மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் வருகை தர உள்ளார்கள்.

அது சமயம் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்தாலோசித்து அனைவருக்கும் முறையாக தகவல் தெரிவித்து வாக்கு சேகரிப்பதற்கு எழுச்சியுடன் ஏற்பாடுகளை செய்து உற்சாக வரவேற்பையும் அளித்திடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அச்சிறுபாக்கம் தெற்கு ஒன்றியம்

வ.எண்	நேரம்	பகுதி	வ.எண்	நேரம்	பகுதி
1.	7.00	புதுப்பேட்டை	6.	11.00	தொழுப்பேடு
2.	8.00	பள்ளிப்பேட்டை	7.	11.30	தொழுப்பேடு காலனி
3.	8.30	E.B.காலனி	8.	12.00	ஆத்தூர்
4.	9.30	நேமம்-அத்திவாக்கம்	9.	12.30	ஆத்தூர் காலனி
5.	10.00	காட்டுக்கூடலூர்			

அச்சிறுபாக்கம் வடக்கு ஒன்றியம்

வ.எண்	நேரம்	பகுதி	வ.எண்	நேரம்	பகுதி
1.	1.00	மொறப்பாக்கம்	6.	3.30	மாத்தூர்
2.	1.30	தண்டலம்	7.	4.00	அகிலி
3.	2.00	கழனிப்பாக்கம்	8.	4.30	செண்டிவாக்கம்
4.	2.30	கூடலூர்	9.	5.00	சிறுநாகலூர்
5.	3.00	முனியந்தாங்கல்	10.	5.30	ஊனமலை

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி - அச்சிறுப்பாக்கம் தெற்கு - வடக்கு ஒன்றியம்

தா.மோ.அன்பரசன் - க.சுந்தர்

தொகுதிப் பொறுப்பாளர்கள்

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் ஐ.பரந்தாமனை ஆதரித்து திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம் பாப்பா நல்லூர் தண்டரப்பேட்டை ஆகிய பகுதியில் உள்ள கைப்பந்து விளையாட்டு வீரர்களிடம் மற்றும் 100 நாட்கள் வேலை செய்யும் பெண்களிடம் திமுக செய்த சாதனைகளை மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் உடன் மாநில மாவட்ட நிர்வாகிகள் மு. பகலவன், ஜெ. மூர்த்தி, கே.வி.ஜி. உமா மகேஸ்வரி, வேணு, மாதரபாக்கம் பா.செ.குணசேகரன், ஜி.பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின், ஒன்றிய கழகச் செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், ஆ.சத்திய வேலு, ஜான் பொன்னுசாமி, அபிராமி குமரவேல், ஜி.பி.வெங்கடேசன், க.சம்பத், நா.மோகன் ராஜ், பா.து.தமிழரசன் கு.மணிமாறன், உள்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.